**தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.2 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமானக் குறியீட்டிற்குரிய 12 வருமானக் கணக்குகளும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின், வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால்

பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128 (1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1 பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.5(அ), (ஆ) |
| | | 2 மனித வளங்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள். | 2.9 |
| | | 3 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை. | 2.2 |
| 128(1)(ஈ) | பெறுனவனவுகள், கொடுப்பனவுகள், வழங்கல்கள் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமை பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதாகவும் | பொது வைப்புக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.8 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான | சொத்துக்கள் | 2.4 |

| | | |
|---|---|---|
| | அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வு செய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கி உள்ளன எனவும், | முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் |

**நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப் பொறுப்புக்கள்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| 128(2)(அ) | வருமானக் குறியீட்டுக்குரிய வருமான மதிப்பீடுகளில் முற்றாகவும் இயன்றளவு செம்மையாகவும் தயாரிக்கப்படுகின்றன என்பதையும் | | எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு முடியாமை/ சேகரிக்க கூடிய வருமானம் அதிகரிக்கும் போது அல்லது குறையும் போது வருமான மதிப்பீட்டைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. | 2.6 (அ) (i)<br>2.6 (ஆ) (i)<br>2.6(இ) (i)<br>2.6(எ)<br>2.6(ஒ) |
| 128(2)(ஈ) | சேகரிப்பது சம்பந்தமாக | | வருமானத்தை சேகரிக்கின்ற ஏனைய திணைக்களத்திடமிருந்து வருமான மதிப்பீட்டிற்காக தகவல்களை கோரியிருக்காமை | 2.6(இ) (ii), (ஊ),(i<br>2.6(ஓ) (ii),(iii),(iv)<br>2.6(ஐ),(ii),(iii) |
| 128(2) (உ) | அரச வருமானங்கள் சேகரிப்பது தொடர்பாக செயற்படும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடனும் அவற்றைச் திணைக்களங்களுடனும் விசாரித்து அரசிற்கு வருமதியாக உள்ள நிலுவையாகவுள்ள அரசிறையை விரைவில் சேகரிப்பதன் பொருட்டு விசேட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன என்பதையும் | 1. | வருமானக் குறியீட்டிற்குரிய வருமானங்களைச் சேகரிக்கின்ற நிறுவனங்களிடமிருந்து நிலுவையான வருமானங்கள் தொடர்பான தகவல்களைக் கோருவதிலுள்ள குறைபாடுகள். | 2.6(அ) (ii),(iii),(இ),(iii),(ஈ),( உ) |
| | | 2. | நிலுவையான வருமானங்களை சேகரிக்க முடியாமை. | 2.6(ஓ) |

| | | | |
|---|---|---|---|
| 128(2)(ஊ) | பல்வேறு திணைக்களங்களிருந்து அரசிறையைச் சேகரிப்பது தொடர்பாக செய்யப்படும் செயற்பாடுகள் அந்தந்த கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஆலோசிக்கப்பட்டு இயைபுபடுத்தப்படுகின்றன என்பதையும் | வருமான குறியீட்டிற்குரிய வருமானங்கள் சேகரிப்பட்ட ஏனைய நிறுவனங்களுடனான கலந்துரையாடல் அல்லது கடித பரிமாற்றங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | 2.6(ஏ) (iv) |
| 128(2) (எ) | அரசிறையைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்ற பல்வேறு திணைக்களங்களிலிருந்து தேவைப்படும் அத்தகைய தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான வருமானத் தலைப்புக்களின் கீழ், சேகரிக்கப்பட்ட தொகைகளின் பதிவுகள் பேணப்பட்டு, அத்தகைய பதிவுகள் வைக்கப்பட்டுள்ளதெனவும் அந்தந்த வருமானக் குறியீடுகளில் சேகரிக்கப்பட்ட வருமானம் தொடர்பாக திறைசேரியில் வைத்திருக்கப்படும் கணக்குகளுடன் அவ்வறிக்கை இணங்கச் செய்யப்படுகின்றன என்பதையும் | திறைசேரியின் இறுதி கணனி அச்சுப் பிரதிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வருமானக் கணக்குகளைத் தயாரித்தல். | 2.6(ஊ) (iii)(iv) |
| 128(1)(ஐ) | தேவையான இடத்தில் பொருளாதார நிலைகளிலும் பிற நிலைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனித்துத் காலத்துக்குக் காலம் வரிகள், கட்டணங்கள் முதலியவற்றின் வீதங்களும் செலவுப் பணங்களும் அறவீடு மீளாய்வு செய்யப்பட்டு அவற்றை மீள அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதையும். | வருமான முரண்கள் சம்பந்தமாக தாக்கமளித்த விடயங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்படாமை | 2.6(அ) (ii)<br>2.6 (ஒ) (iii) (iv) (v) |

**2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

**2.1 திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்**

---

(அ) திறைசேரியின் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம்

(ஆ) கொடுப்பனவு முறைமைகளினூடாக திறைசேரியின் நிதியத்தை பயன்படுத்துதல்

(இ) செலவுகள் நிறுவனங்களின் நிதியத் தேவைப்பாட்டை மதிப்பீடு செய்து முன்னுரிமையின் அடிப்படையில் நிதியத்தை விடுவித்தல்.

(ஈ) திறைசேரி பிணை முறிகளை வழங்குதல்

(உ) அரசாங்கத்தின் உப கடன்களை அறவீடு செய்தலும் அது தொடர்பாக திறைசேரி ஏடுகளை பேணுதலும்.

(ஊ) திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வரியற்ற வருமானங்கள் 12 தலைப்புக்களின் கீழ் வருமானங்களை மதிப்பீடு செய்தல், சேகரித்தல் மற்றும் கணக்கீடு செய்தல்.

(எ) வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் மானியத்தின் கீழ் கிடைக்கின்ற பணத்தை உரிய செயற்திட்டங்களுக்கு வழங்குவதற்காக வசதிகளை வழங்குதல்.

(ஏ) வெளிநாட்டு உதவிக் கணக்குகளை வைக்கும் நடைமுறைக்காக வசதிகளை வழங்குதல்.

(ஐ) அரசாங்க கடன்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல்.

(ஒ) அரசாங்கத்தின் வங்கி கணக்குகளையும் கட்டு நிதிக் கணக்குகளையும் ஆரம்பித்தல் / பேணுவதற்காக அதிகாரம் வழங்கப்படுதலும் மேற்பார்வை செய்தலும்.

(ஓ) அரசாங்க உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன் திட்டங்களை செயற்படுத்துதல்.

## 2.2 திறைசேரி காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் வருமானங்கள் மற்றும் ஏனைய பணப் பெறுகைகளுடனான முழுப் பணம் பெறுவனவுகள் ரூபா 1,765.3 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீண்டுவரும் செலவுகள் ரூபா 1,853.6 பில்லியன் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 646.1 பில்லியன் ஆக ரூபா 2,499.7 பில்லியன் மொத்த தொகையினை செலவு செய்ததன் பின்னர் ஆண்டில் தேறிய பண நிலுவை ரூபா 734.4 பில்லியனாக இருந்தது. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 182.2 பில்லியனால் அல்லது 32.99 சதவீதத்தால் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. அந்த தேறிய பண நிலுவைக்கு ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கடன் பெறுகைகள் ரூபா 695.6 மில்லியன் செம்மையாக்கல் கணக்கின் மீதி ரூபா 12.9 பில்லியன் மற்றும் ஆண்டின் ஆரம்ப பண நிலுவை ரூபா 160.3 பில்லியனை செம்மையாக்கியதன் பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பண மீதி (நிலுவை) ரூபா 186.2 பில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பண நிலுவை ரூபா 25.9 பில்லியனால் அல்லது 16.15 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### (ஆ) கட்டுநிதியை விடுவித்தல்

மீளாய்வாண்டில் செலவு செய்வதற்குத் தேவையான கட்டு நிதி கீழே தரப்பட்டவாறு பொதுத் திறைசேரியால் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

| | **மீண்டுவருபவை** | **மூலதனம்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| மதிப்பீடு செய்யப்பட்ட செலவு | 2,026,683 | 935,259 | 2,961,942 |
| மீளாய்வாண்டின் போது வேண்டிக் கொள்ளப்பட்ட கட்டுநிதிப் பெறுமதி | 1,334,466 | 863,557 | 2,198,023 |
| வருடாந்த கட்டு நிதி எல்லை | 1,201,380 | 584,114 | 1,785,494 |
| ஆண்டின் போது விடுவிக்கப்பட்ட கட்டுநிதியின் பெறுமதி | 1.131,340 | 400,819 | 1,532,159 |

| | | | |
|---|---|---|---|
| வருடாந்த கட்டு நிதி எல்லையை விட குறைந்த கட்டுநிதியை விடுவித்தல் | 70,040 | 183,295 | 253,335 |

அதற்கிணங்க மீளாய்வாண்டில் வருடாந்த கட்டு நிதி எல்லைகளை விட மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 70,040 மில்லியன் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக ரூபா 183,295 மில்லியன் ஆக ரூபா 253,335 மில்லியன் மொத்த தொகை குறைத்து பொதுத் திறைசேரியால் கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளில் ஆண்டின் போது விடுவிக்கப்பட்ட சதவீதம் முறையே 56 சதவீதம் மற்றும் 43 சதவீதம் மாத்திரமாகும்.

**2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்**

திணைக்களத்தினால் அரசாங்க பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 7.28 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2.63 மில்லியன் நிதி எற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 6.5 மில்லியன் பெறுமதியான ஒரு வாகனம் 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு (i) நடைமுறையற்ற சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **செலவு வகை** | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | **சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 2013 | மீண்டுவருபவை | 492,488.77 | 470,532.19 | 21,956.58 | 04 |
| | மூலதனம் | 1,066.80 | 649.13 | 417.67 | 39 |
| | அரசாங்க கடனை மீளச் செலுத்தல் | 747,000.00 | 702,518.90 | 44,481.10 | 06 |
| | **முழு மொத்தம்** | **1,240,555.57** | **1,173,700.22** | **66,855.35** | 05 |
| 2014 | மீண்டுவருபவை | 455,503.70 | 453,774.80 | 1,728.91 | 0 |
| | மூலதனம் | 3,155.89 | 1,961.08 | 1,194.81 | 38 |
| | அரசாங்க கடனை மீளச் செலுத்தல் | 658,719.22 | 635,966.57 | 22,752.65 | 03 |
| | **முழு மொத்தம்** | **1,117,378.81** | **1,091,702.45** | **25,676.37** | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2015** | மீண்டுவருபவை | 531,602.58 | 528,958.83 | 2,643.74 | 0 |
| | மூலதனம் | 5,475.32 | 5,457.99 | 17.33 | 0 |
| | அரசாங்க கடனை மீளச் செலுத்தல் | 863,781.10 | 846,395.11 | 17,385.99 | 02 |
| | **முழு மொத்தம்** | 1,400,859.00 | 1,380,811.93 | 20,047.06 | 01 |
| **2016** | மீண்டுவருபவை | 621,424.36 | 614,495.63 | 6,928.73 | 01 |
| | மூலதனம் | 7,626.21 | 5,759.69 | 1,866.52 | 24 |
| | அரசாங்க கடனை மீளச் செலுத்தல் | 743,380.69 | 741,548.63 | 1,832.06 | 0 |
| | **முழு மொத்தம்** | **1,372,431.26** | **1,361,803.95** | **10,627.31** | 01 |
| **2017** | மீண்டுவருபவை | 767,407.13 | 741,783.85 | 25,623.28 | 03 |
| | மூலதனம் | 2,249.78 | 2,142.74 | 107.04 | 05 |
| | அரசாங்க கடனை மீளச் செலுத்தல் | 898,105.65 | 867,483.51 | 30,622.14 | 03 |
| | **முழு மொத்தம்** | **1,667,762.56** | **1,611,410.10** | **56,352.46** | 03 |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை.**

செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 0.1 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் எதுவித செயற்பாட்டுக்கும் பயன்படுத்தப்படாது முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதி ஏற்பாடு வழங்குதல்**

11 செலவு விடயங்களுக்காக ரூபா 464.7 மில்லியன் கூட்டுமொத்தமான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அந்த செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 204.9 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 18 சதவீதத்திலிருந்து 92 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 2.7 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டிற்கான 12 வருமான குறியீடுகளுக்காக ரூபா 60,075 கூட்டு மொத்தமான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அந்த மதிப்பீடு ரூபா 51,039 மில்லியன் வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 55,099.23 மில்லியன் கூட்டு மொத்தமான வருமானம் சேமிக்கப்பட்டிருந்தது. அது தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 92 சதவீதமும் திருத்திய மதிப்பீட்டில் 108 சதவீதமும் ஆக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | மிகை / (பற்றாக்குறை) | | மிகை / (பற்றாக்குறை) | |
|---|---|---|---|---|---|---|---|
| வருமானக் குறியீடு | தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திருத்திய மதிப்பீட்டிற்கான ஒப்பீடு | தொடக்க மதிப்பீட்டிற்கான ஒப்பீடு | திருத்திய மதிப்பீட்டின் சதவீதமாக | தொடக்க மதிப்பீட்டின் சதவீதமாக |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| 20.02.01.99 | 400 | 278 | 358.75 | 80.75 | (41.25) | 29 | (10) |
| 20.02.02.01 | 4,950 | 4,300 | 4,648.59 | 348.59 | (301.41) | 08 | (06) |
| 20.02.02.99 | 1,300 | 1,650 | 2,746.79 | 1,096.79 | 1,446.79 | 66 | 11 |
| 20.03.01.00 | 125 | 110 | 120.68 | 0.68 | (4.32) | 10 | (03) |
| 20.03.02.99 | 6,000 | 5,000 | 6,143.40 | 1,143.40 | 143.4 | 23 | 02 |
| 20.03.03.02 | 8,500 | 2,600 | 1,506.98 | (1,093.02) | (6,993.02) | (42) | (82) |
| 20.03.05.00 | 1,000 | 1 | 7.25 | 6.25 | (992.75) | 625 | (99) |
| 20.03.99.00 | 11,000 | 11,000 | 12,894.83 | 1,894.83 | 1,894.83 | 17 | 17 |
| 20.05.99.00 | 2,500 | 1,750 | 2,078.73 | 328.73 | (421.27) | 19 | (17) |
| 20.06.02.00 | 300 | 100 | 144.08 | 44.08 | (155.92) | 44 | (52) |
| 20.06.04.00 | 14,000 | 16,250 | 16,418.06 | 168.06 | 2,418.06 | 1 | 17 |
| 30.01.01.00 | 10,000 | 8,000 | 8,031.09 | 31.09 | (1,968.91) | 0.4 | 0.04 |
| | **60,075** | **51,039** | **55,099.23** | **4,060.23** | **(4,975.77)** | **8** | **8** |

மேற்கூறிய வருமானக் கணக்குகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) 20.02.01.99 ஆம் இலக்க வருமான குறியீடு – ஏனைய குத்தகை வாடகை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த வருமானக் கணக்கில் குத்தகை வாடகைகள் போன்ற உடன்படிக்கைகளின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே அந்த வருமானத்தை சரியாக எதிர்வு கூறுவதற்கு முடியாதிருந்தும் மேற்கொள்ளப்பட்ட எதிர்வு கூறல்களின் பின்னர் அதிகளவான முரண்களுக்கு உட்பட்டிருந்தன.

(ii) 11 செலவுத் தலைப்புக்களிலிருந்து வருமானத்தைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மீளச்செலுத்துதல் இந்த வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அரச பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமான பத்தரமுல்லையில் அமைந்துள்ள சுகுருபாய கட்டிடங்களிலிருந்து மாத்திரம் மீளாய்வாண்டின் போது ரூபா 272.67 மில்லியன் வருமானம் கிடைத்திருந்தது. அது இந்த வருமான குறியீட்டின் கீழுள்ள மொத்த தேறிய வருமானத்தில் 76 சதவீதம் அளவுடையதாக இருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வருமானங்களைத் தீர்மானித்தல், சேகரித்தல், மற்றும் கணக்கீடு செய்தல் தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவான மட்டத்தில் மேற்பார்வை செய்தல் அல்லது பின்தொடர் நடவடிக்கை எடுத்தலானது வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது வருமானத்தை சேகரிக்கின்ற திணைக்கள தலைவரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிறுவனத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சதுர

அடி அளவுகள் மற்றும் ஒரு சதுர அடிக்கான பெறுமதி ரூபா 44 இலிருந்து ரூபா 215 வரையான வீச்சினைக் கொண்டிருந்தன. அதன் காரணமாக காலத்துக்கு காலம் உரிய பெறுமதி திருத்தம் செய்யப்பட்டிருத்தல், சதுர அடி அளவும் சதுர அடியின் பெறுமதியும் தீர்மானிக்கப்படும் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் சிபார்சுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2018 யூன் 13 ஆந் திகதி வரை அது தொடர்பாக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- ஒவ்வொரு மாதத்தின் போது வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்த பெறுமதிக்குரிய விபரமான துணைப் பதிவேடு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் அல்லது பாதுகாப்பு அமைச்சினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2018 யூன் 13 ஆந் திகதி வரை 2017 ஆம் ஆண்டிற்கான வாடகை வருமானமாக ரூபா 49.91 மில்லியன் கிடைத்திருந்தும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திடமிருந்து 2017 திசெம்பர் மாதத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 5.02 மில்லியன் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் வருமானக் கணக்கின் நிலுவை வருமானத்தின் கீழ் சுகுருபாய கட்டிடத்திற்காக எதுவித நிலுவை வருமானமும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii) திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் இவ்வருமான குறியீட்டின் கீழ் ரூபா 51.70 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 03 குத்தகை உடன்படிக்கைகளின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் அந்த சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 14 சதவீதமாக இருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அமெரிக்க ஐக்கிய குடியரசு அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே 1991 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 20 ஆண்டுகள் காலப்பகுதிக்காக ஒலிபரப்பு பரிமாற்று நிலையத்தை நிர்மாணித்து செயற்படுத்துவதற்கு ஒரு காணியை வழங்குவதற்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கை 2016 திசெம்பர் 31 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ரூபா 14.41 மில்லியன் கூட்டுமொத்தமான வாடகை வருமானம் கிடைத்திருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டின் பின்னர் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அக்கட்டிடம் வாடகைக்கு வழங்கப்படாமையின் காரணமாக அரசாங்கத்தால் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

- கொழும்பு 11 மத்திய வீதியின் 223 மற்றும் 227 ஆம் இலக்க கட்டிடத்தை வாடகை அடிப்படையில் வழங்குவது சம்பந்தமாக இரண்டு தனியார் கம்பனிகளுடன் 2003 யூன் 01 ஆந் திகதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது. இரண்டு சந்தர்ப்பங்களின் போது அந்த உடன்படிக்கைகள் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2011 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் திருத்தம் செய்யப்படாது கடிதத்தின் மூலம் மாத்திரம் உடன்படிக்கை நீடிக்கப்பட்டு வந்திருந்தன. அதன் காரணமாக இறுதிக் காலப் பகுதியின் போது மாதாந்த வாடகை குறைவடைந்திருந்ததனாலும் முறைப்படியாக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவும் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியதாகவிருந்த வருமானம் குறைவடைந்திருந்தது.

- இலங்கை அரசாங்கம் சீனக் குடா பெற்றோலியப் பண்ணை (China Bay Oil Farm) நிறுவனத்துடன் 2003 பெப்ரவரி 07 ஆந் திகதியிலிருந்து 35 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்காக உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. அந்த உடன்படிக்கை 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அமெரிக்க ஐக்கிய குடியரசின் முன்னைய 05 ஆண்டுகளுக்கான திரண்ட பணவீக்க விகிதத்தினை

அடிப்படையாகக் கொண்டு (Bassed on the Cumulative rate of inflation of the United States of Amrerica for the preceding 05 years) சுயமாக திருத்தம் செய்யப்பட வேண்டுமெனவும் உற்பத்தி இயலளவின் பிரகாரம் வாடகை செம்மையாக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் PE/EN/CPC/Gen/2017 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் புரிந்துணர்வு உடன்படிக்கையின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் களஞ்சிய வசதிகள் மற்றும் காணியை பயன்படுத்துவதற்காக 06 மாதங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட வேண்டியிருந்தது. அந்த குத்தகை உடன்படிக்கை அமுல்ப்படுத்தப்படுமாகயிருந்தால் உரிய குத்தகை கொடுப்பனவுகள் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நாளது வரையாப்பட வேண்டியிருந்தது. எனினும் யூலை 30 ஆந் திகதி வரை உரிய குத்தகை உடன்படிக்கையை மேற்கொள்வதற்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது அந்த உடன்படிக்கைகள் நீடிக்கப்பட்டிருந்தும் உரிய குத்தகை உடன்படிக்கையை மேற்கொள்வதற்காக ஆட்சியிலுள்ள அரசாங்கத்தால் கொள்கை ரீதியாக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததனால் உரிய வாடகையை செம்மையாக்குதலை புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்ட முறைமையில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததாக திணைக்களத்தால் கணக்காய்விற்குச் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமான கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2018 யூன் 25 ஆந் திகதிய PED/ACC/ in – Audit 2018 (i) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திருகோணமலை பெற்றோலிய தாங்கித் தொகுதிகளுக்கு தொடர்புபட்ட சீனக் குடா பெற்றோலிய பண்ணை நிறுவனம் சம்பந்தமான உடன்படிக்கை மற்றும் உரிய கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் தற்பொழுது நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவும் இது சம்பந்தமான சட்ட நடவடிக்கைகளை திணைக்களத்தின் ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு எண்ணியுள்ளதாகவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது அமெரிக்க டொலர் 100,000 வருமானம் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த இந்த உடன்படிக்கையை நாளது வரையாக்காமை மற்றும் அதில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைக்க கூடியதாகவிருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. என இதற்கு இணங்க அவதானிக்கப்பட்டது.

**(ஆ) 20.02.02.01 ஆம் இலக்க வருமானக் குறியீடு – வட்டி – கடன் வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இவ்வாறான குறியீடு தொடர்பாக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் 2016 யூலை 29 ஆந் திகதி ரூபா 3,574 மில்லியன் தொடக்க மதிப்பீடும் 2017 யூலை 28 ஆந் திகதி ரூபா 4,340 மில்லியன் திருத்திய மதிப்பீடும் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் அது ரூபா 4,300 மில்லியனாக திருத்தப்பட்டிருந்தது.

(ii) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக உள்ள உப கடன் மீதி ரூபா 178,281 ஆகும். அதற்கான வட்டியை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை பின்பற்றப்படாமையின் காரணமாக நிலுவை வருமான அறிக்கைகளின் பிரகாரம் 07 நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்த கடன்களுக்காக 2017 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய நிலுவை வட்டி ரூபா 1,817 மில்லியன் கூட்டு மொத்தமாக

இருந்தது. கடன் வட்டியை அறவீடு செய்வது சம்பந்தமாக ஆலோசனையை வழங்குமாறு சட்டவிவகார திணைக்களத்திடம் வேண்டப்பட்டிருந்தும் மில்கோ நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 5 மில்லியனைத் தவிர்த்து வேறு எந்த பணத்தையும் அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

**(இ) 20.02.02.99 ஆம் இலக்க வருமான குறியீடு – வட்டி – ஏனையவை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,300 மில்லியன் தொகையான தொடக்க வருமான மதிப்பீடு ரூபா 1,650 மில்லியன் ஆக திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த மொத்த தேறிய வருமானம் ரூபா 2,747 மில்லியனாக இருந்ததனால் அது தொடக்க மதிப்பீட்டில் 211 சதவீதம் மற்றும் திருத்திய மதிப்பீட்டில் 166 சதவீதமாகும். ஆண்டின் ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்படாத திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 02 டொலர் கணக்குகளுக்குரிய 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகள் தொடர்பான வட்டி வருமானத்தில் இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான பெறுவனவுகளின் காரணமாக இவ்வாறு முரண் ஏற்பட்டிருந்ததாக 2017 யூலை 28 ஆந் திகதி வருமாண கணக்கீட்டு உத்தியோகத்தரால் ரூபா 1000 மில்லியன் தொகையான திருத்திய மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது ரூபா 1,650 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ii) இவ் வருமானக் குறியீட்டின் கீழ் பிரதான வருமான மூலமாகிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக அறவிடப்படுகின்ற வட்டியாகும். எவ்வாறாயினும் இக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு மாற்று வழி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது நிதிப்பிரமாணம் 113 இன் கீழ் அம் மீதியை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டதுடன் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு அரசாங்க நிதித் திணைக்களத்தால் கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த கடன் மீதிகள் ரூபா 2.68 மில்லியனாக இருந்தது. இதற்கிணங்க இக் கைவிடுதலில் அதிகரிக்கும் போக்கு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டின் போது குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போதும் அரசாங்க நிதித் திணைக்களத்தால் 5 நிறுவனங்களுக்குரிய ரூபா 0.66 மில்லியன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் கடன் மீதிகள் பதிவழிக்கப்பட்டிருந்தன.

(iii) மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 27 முற்பணக் கணக்குகளைப் பரீட்சித்த போது இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவையை கைவிட்டுச் சென்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட, மரணமடைந்த மற்றும் இளைப்பாறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 253.73 மில்லியன் கடன் மீதி கணக்காய்வுத் திகதி வரையும் அறவிட முடியாது காணப்பட்டது. 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 04(ஆ) பந்தியின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவீடு செய்ய வேண்டியிருந்த நிலுவை வருமானங்கள் தொடர்ந்தும் கூட்டுச் சேர்வதனைத் தவிர்ப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இக்கடன் மீதிகளுக்குரிய

வட்டியை அறவீடு செய்வது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) 20.03.01.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு – விற்பனைகளும் கட்டணங்களும் - திணைக்களரீதியான விற்பனைகள்.**

இரண்டு நிறுவனங்களால் இவ்வருமானக் கணக்கிற்கு மொத்த வருமானத்தில் முறையே 39 சதவீதம் மற்றும் 35 சதவீதமாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. உரிய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அவ் வருமாணங்களை நிருவகிப்பது தொடர்பாக எதுவித தகவல்களும் பேணப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 20 ஆந் திகதிய 01/2015 (v) ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் மூலம் அப்பொறுப்பு வருமானங்களைச் சேகரிக்கின்ற நிறுவனத் தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. என்பது கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அப்பொறுப்பு வருமானத்தை சேகரிக்கின்ற நிறுவனத்தலைவராலும் முறைப்படியாக செய்யப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாறு வருமானங்களை சிறப்பாக சேகரித்து அரசாங்க வருமானத்தை அதிகரிப்பது தொடர்பாக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மேற்பார்வை, ஒழுங்குபடுத்தல் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்தும் தேவைப்பாடு வலியுறுத்தப்படுகின்றது.

**(உ) 20.03.02.99 ஆம் இலக்க வருமானக் குறியீடு – விற்பனைகளும் கட்டணங்களும் - நிருவாக ரீதியான கட்டணங்களும் கொடுப்பனவுகளும் - நாணாவிதம்**

2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 04(ஆ) பந்தியின் பிரகாரம் அறவீடு செய்ய வேண்டிய நிலுவைப பணம் மேலும் கூட்டு சேர்வதை தவிர்ப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கணக்கின் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ரூபா 0.96 மில்லியன் கூட்டு மொத்தமான நிலுவைப் பணமும் முன்னைய ஆண்டிற்கான நிலுவைப் பணமுமான ரூபா 0.04 தொகையை அறவீடு செய்து அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) 20.03.03.02 ஆம் இலக்க வருமானக் குறியீடு – விற்பனைகளும் கட்டணங்களும் - தண்டப்பணமும் பறிமுதல் செய்தல்களும்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானமாகிய ரூபா 1,507 மில்லியன் தொகையில் ரூபா 1,072 மில்லியன் அல்லது 71 சதவீதம் நிதி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக் கணக்கிற்குரிய வருமாண கணக்கீட்டு உத்தியோகத்தராக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் செயற்பட்டிருந்தும் இவ் வருமானங்களைச் சேகரித்தல் 225 இற்கு மேற்பட்ட கணக்கு அலகுகளினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 31 ஆந் திகதிய 01/2015 (v) ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் இந்த அனைத்து வருமானங்கள் சம்பந்தமாகவும் நேரடியாக மேற்பார்வை செய்தல் மற்றும் கணக்கீடுகளைப் பராமரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், அது நடைமுறையில் இல்லாததனால் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் (அ) – (இ) உப பந்திகளின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இவ்வருமானத்தில் 71 சதவீதம் அளவானவை தொடர்பான ஆவணங்கள் அல்லது வருமான

நிருவாகத்திற்குரிய தகவல்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடம் இருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் தலைப்பின் கீழ் மொத்த தேறிய வருமானத்தில் 27 சதவீதம் அதாவது ரூபா 411.80 மில்லியன் வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ் வருமானங்கள் பறிமுதல் செய்யப்பட்டவைகளுக்குரியதாகும்.

(iii) தேசிய லொத்தர் சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செல்லுபடியற்றதாக்கப்பட்ட பரிசுகளின் (Forteited Priges) பெறுமதி ரூபா 339.07 மில்லியனாக இருந்ததுடன் அரசாங்கத்தின் வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக 2016 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதி தொடர்பாக செல்லுபடியற்றதாக்கப்பட்ட பரிசுப் பணமான ரூபா 82.49 மில்லியனும் அதற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவ்களின் பிரகாரம் வருமானததிலிருந்து மீளச் செலுத்தல்கள் ரூபா 1,253.77 மில்லியனாக இருந்ததுடன் அப் பெறுமதி மொத்த வருமானமாகிய ரூபா 1,506.98 மில்லியனில் 83 சதவீதமாக இருந்தது. பிழையை சரி செய்தலானது அந்த மீளச் செலுத்தலில் 99 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் அப் பிழையை குறைத்துக் கொள்வது சம்பந்தமாக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல் அல்லது அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) 20.03.05.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு – திறைசேரி பிணை முறி மிகை அறவீடு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க நிதிக்கொள்கைத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அரசாங்க வருமானங்கள் காசு அடிப்படையில் இனங்காணப்பட்டிருந்தும் திறைசேரி பிணை முறி மிகை அறவீட்டு வருமானம் உரிய காலப்பகுதிக்குள் பிற்போடப்படுவதன் காரணமாக இவ் வருமானம் சம்பந்தமாக அவ்வாறு காசு அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கான ரூபா 1,000 மில்லியன் தொடக்க வருமான மதிப்பீடு ரூபா 1 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தும் வருமானக் கணக்கில் ரூபா 0.5 மில்லியனாக பிழையாகக் காட்டப்பட்டிருந்தது.

(iii) சேகரிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானம் ரூபா 7.25 மில்லியனாக இருந்ததன் காரணமாக தொடர் வருமான மதிப்பீட்டில் அது 0.7 சதவீதம் மற்றும் சரியான திருத்திய வருமான மதிப்பீட்டின் 725 சதவீதமாக இருந்தது. 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 0.3 ஆம் பந்தியின் பிரகாரம் சரியான கொள்கைரீதியான தீர்மானம் எடுப்பதற்காக அரசாங்க செலவைத் தீர்மானிப்பதற்கு வருமானத்தை சரியாக எதிர்வு கூறுவது மிகவும் முக்கியமானதாக இருந்த போதிலும் அதிகளவான முரண்கள் காணப்படுவதன் மூலம் அக் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஏ) 20.03.99.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு – விற்பனைகளும் கட்டணங்களும் (ஏனைய பெறுவனவுகள்)**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இவ் வருமான கணக்கு தொடர்பாக ரூபா 13,511.78 மில்லியன் வருமானமாகக் கிடைத்திருந்ததுடன் ரூபா 11.80 மில்லியன் மீளச் செலுத்தலாமவும் ரூபா 505.15 மில்லியன் பணம் பிழைகளைச் சரிசெய்வதற்குரிய வரவு வைத்தல்களாகவும் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க ரூபா 616.95 மில்லியன் பணம் வருமானத்திலிருந்து மீளச் செலுத்தப்பட்டிருந்தன் காரணமாக மொத்த தேறிய வருமானம் ரூபா 12,894.83 மில்லியனாக இருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 128(2) (இ) இன் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருமானத்தை சேகரிப்பது சம்பந்தமாக தனது பொறுப்பிற்கு கட்டுப்பட்டுள்ள அரசாங்க வருமானத்தில் ஏதாவது ஒரு பகுதி ஏனைய மூலம் சேகரிக்கப்படுமாயிருந்தால் அத் திணைக்களம் மற்றும் அலுவலகத்திடமிருந்து அறிக்கையைப் பெற்று அவற்றில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அரசாங்க வருமான மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுகின்றன என்பது உறுதிப்படுத்தப்படும் வகையில் போதியளவு ஒழுங்கு விதிகள் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் 2016 திசெம்பர் 30 ஆந் திகதிய 01/2015 (v) ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் மூலம் அப் பொறுப்பு திணைக்களம் மற்றும் நிறுவனத் தலைவரால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் காரணமாக வருமானக் கணக்கு கணக்காய்வின் போது தேவையான ஆவணங்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடம் இல்லாததன் காரணமாக அவ்வருமான கணக்குகளுக்குரிய வருமானங்களை சேகரித்த இரண்டு நிறுவனங்கள் மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு 2018 யூன் மாதத்தின் போது மேற்கொண்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது பொறுப்பு வருமானத்தை சேகரிக்கின்ற அமைச்சு / திணைக்களம் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் வருமான நிருவாக சம்பந்தமாக 01/2015 ஆம் இலக்க 2015 யூலை 20 ஆந் திகதிய அரசாங்க நிதிக் கொள்கை பொது சுற்றறிக்கையைத் தவிர்த்து வேறு எந்த எழுத்து மூல அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

- அந்த வருமானம் சேகரிக்கின்ற வருமான அலகிற்கும் அவ்வாறு எழுத்து மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

- 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் வருமானத்தை சேகரிக்கின்ற திணைக்கள தலைவரால் வருமானம் சம்பந்தமாக தமது பொறுப்பு போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டன.

(iii) பின்வரும் ஒவ்வொரு திணைக்களத்தினதும் வருமான சேகரிப்பு நடவடிக்கை சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள ஏற்றுமதி விவசாய பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந் நாற்றுக்களுக்குரிய வெளியிடப்பட்ட விலைகளில் 50 சதவீதம் விவசாயிகளால் செலவு செய்யப்பட வேண்டியிருந்தது. அதற்காக புதிய வருமானக் குறியீடு 2018 யூன் மாதமளவில் அரசாங்க நிதிக் கொள்கை திணைக்களத்திடமிருந்து கிடைத்திருக்கவில்லை. மேலும், உரிய வருமானங்களைச் கோித்தல் மற்றும் கணக்கீடு செய்தல் சரியாக இடம் பெற்றதா என்பது தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவு மட்டத்தில் மேற்பார்வை அல்லது பின்தொடர் நடவடிக்கையானது வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது வருமானத்தை சேகரிக்கின்ற திணைக்கள தலைவரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இக் கணக்காய்வு அவதானிப்பு நேரடியாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்குரியவையல்ல என பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தும் பொதுத் திறைசேரி கண்காணிப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள திணைக்களமாக அத்திணைக்களத்தின் வருமானத்தை சேகரிப்பது தொடர்பாக தொடர்ந்தும் ஈடுபடுதல் அவசியம் என்பது அவதானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தும் வருடாந்தம் 289-2-1-2202 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் இந்த நாற்றுக்களை வழங்குதல் இடம் பெற்றிருந்ததன் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3.04 மில்லியன் உரிய வருமானக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

- திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது இந்த வருமானத்தை செலவு வைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிக் கணக்கில் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட 2018 மார்ச் மாதத்திற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மேலே கூறப்பட்டவாறு கணக்கீடு செய்யப்படாத இனங்காணப்படாத பெறுவனவுகளாக ரூபா 2.25 மில்லியன் காணப்பட்டது.

- கால்நடை உணவு மற்றும் சுகாதார திணைக்களத்தால் 40 வருமான அலகுகளின் மூலம் வருமானங்கள் சேகரிக்கப்பட்டு வருவதுடன் நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 2 ஆண்டுகளுக்குள் உரிமை கோரப்படாததன் அடிப்படையில் காலாவதியான வைப்புக்கள் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் பேணப்பட்டுவந்த 04 வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 4 மில்லியன் மீதி சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கால்நடை உணவு அதிகாரச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை திருத்தம் செய்யாமை கால வீச்சு 4 ஆண்டுகளிலிருந்து 11 ஆண்டுகள் வரை பரவிக் காணப்பட்டன.

(iv) கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கீழ் எம்பிலிபிடிய தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தின் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக வசதிகளை வழங்குவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1.2 மில்லியன் வருமானம் மேற்கூறிய வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது அது தொடர்பான செலவுகளைச் செய்வதற்காக அப் பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும் அதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) 20.05.99.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு உள்ளமையை ஒப்படைத்தல் - தேசிய லொத்தர் சபையும் ஏனைய ஒப்படைப்புக்களும்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க வருமானத்தை கணக்கீடு செய்தல் காசு அடிப்படையில் இடம் பெறுவதன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 19.62 மில்லியன் தேறிய வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் போது 2016 திசெம்பர் மாத வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாகவும் 2017 திசெம்பர் வருமானம் 2018 ஆம் ஆண்டிற்கான வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டிற்கான சந்தைப்படுத்தல் வருமானமற்ற செவன – பெசிப், சுபிரி கொவிசெத ஆகிய லொத்தர்களின் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 461.45 மில்லியன் புதிய சந்தைப்படுத்தல் வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சந்தைப்படுத்தல் வருமானம் ரூபா 3,423.24 மில்லியனால் அதாவது 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது. இக் கணக்காய்வு அவதானிப்பு நேரடியாக திறைசேரிகள் செயற்பாட்டு திணைக்களத்திற்குரியதல்ல என பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தும் பொதுத் திறைசேரியின் மேற்பார்வையை ஒப்படைத்துள்ள திணைக்களமாக அத் திணைக்களம் வருமானங்களை சேகரிப்பதில் தொடர்ந்தும் ஈடுபடுவது முக்கியமானது என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) உடல் நல மண்டபத்திற்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள வைத்திய சாலைகளைத் திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக நிதியத்தை சேகரிக்கும் குறிக்கோளுடன் சுகாதார அபிவிருத்தி லொத்தர்களை நடாத்தி நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 1998 இன் 22 ஆம் இலக்க நிதி (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 7(4) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சு செயலாளரின் மூலம் லொத்தர் வருமானத்தில் சபையின் அங்கீகரித்த செலவுகளைக் கழித்ததன் பின்னர் எஞ்சிய பணத்தை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். லொத்தாரின் விலையை ரூபா 10 இலிருந்து ரூபா 20 வரை உயர்ந்த நிலை வரை அல்லது விற்பனை முன்னேற்றமடைந்ததன் பின்னர் ஒரு ஆண்டு வரை பேணுவதன் கீழ் 2017 ஆம் ஆண்டு வரை விற்பனையில் 15 சதவீதம் ஆன லொத்தரின் பங்களிப்பு 2008 ஆம் ஆண்டிலிருந்து 10 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2008 ஆம் ஆண்டிலிருந்து லொத்தரின் விலை ரூபா 10 இலிருந்து ரூபா 20 வரை உயர்வடைந்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் லொத்தர் விற்பனை வருமானமும் அதிகரித்திருந்தும் ஜாதிக சம்பத லொத்தரின் சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்பு 10 சதவீதம் பெறுமதியில் மாற்றமின்றிக் காணப்பட்டது. இதன் காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2017 திசெம்பர் மாதம் வரை சுகாதார சேவை அபிவிருத்தி நிதியத்திற்கு ரூபா 180 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது.

(iv) ஊனமுற்ற இராணுவம் மற்றும் அவர்களில் தங்கியுள்ளவர்களுக்காக ரனவிரு சேவா அதிகார சபையால் அமுல்ப்படுத்தப்படுகின்ற நலன்புரிச் செயற்திட்டத்திற்கு தேவையான நிதி ஏற்பாட்டை வழங்குவதற்காக அதிகார சபை தொடக்கத்திலிருந்து ''ஜயவிரு'' லொத்தர் வருமானத்தில் 30 சதவீத பங்களிப்பை வழங்கியிருந்தது. 2011 மார்ச் மாதத்திலிருந்து இந்த ''ஜயவிரு'' பெயர் மாற்றப்பட்டு அதற்காக ''சுபிரி வாசனா சம்பத'' ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளின் பிரகாரம் 2011 திசெம்பர் மாதத்திலிருந்து அப் பங்களிப்பு 10 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. எனினும், அது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ரணவிரு சேவா அதிகார சபையினால் இழக்கப்பட்ட வருமானம் 2011 திசெம்பர் மாதத்திலிருந்து 2017 திசெம்பர் மாதம் வரை ரூபா 1,044 மில்லியனாக இருந்ததுடன் அந்த நிலுவையான பங்களிப்பு சம்பந்தமாக திணைக்களத்தால் 2019 பெப்ரவரி 06 ஆந் திகதி வரை நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்தில் 5 சதவீதம் ஊனமுற்றவர்களுக்கான தேசிய நிதியத்திற்கான பங்களிப்பாக வழங்கப்பட்டிருந்தது. 2010 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அமைச்சரவையினால் அச்சதவீதத்தை 5 சதவீதத்திலிருந்து 8.25 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அத் தீர்மானம் 2019 பெப்ரவரி 06 ஆந் திகதி வரையும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) சுபிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்தில் 10 சதவீதம் திரண்ட நிதியத்தினூடாக தேசிய விளையாட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் 2013 யூலை மாதத்திலிருந்து அப் பங்களிப்பு 5 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது.

(vii) 2017 ஆம் ஆண்டில் 04 லொத்தர்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,097 மில்லியன் கூட்டு மொத்தமான வருமானம் அவை தோற்றுவிக்கப்பட்ட நோக்கத்திற்குரிய நிதியங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) 05 லொத்தர்கள் 2017 ஆம் ஆண்டின் போது 06 மாதங்களிலிருந்து 11 மாதங்கள் வரையான கால எல்லைக்குள் விற்பனை வருமான அறிக்கையை அனுப்பி வைக்காததன் காரணமாக அந்த லொத்தர்களின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களுக்குரிய நிதியை வழங்கும் பங்களிப்பு சதவீததம் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ix) தேசிய லொத்தர் சபை 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தில் லொத்தர்களை நடாத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனமாக இருந்தது. அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் லொத்தர்களை நடாத்துதல் பல்வேறு அமைச்சுக்களுக்காகவும் இடம் பெறுவதுடன் பல்வேறு அமைச்சுக்களுக்காக நடாத்தப்படுகின்ற லொத்தர்களுக்காக மொத்த வருமானத்தின் பங்களிப்பு சதவீதத்தின் அடிப்படையில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய அமைச்சிற்கு திரண்ட நிதியத்தின் ஊடாக வழங்கப்படுகின்றன. திணைக்களத்தினால் வருடாந்தம் நிதி ஏற்பாட்டினை வழங்குதலுக்கு உட்பட்டு அப்பணம் பல்வேறு நிதியங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்டதுடன் அதன் சதவீதத்தினை குறைப்பதன் மூலம் அந்த நிதியத்திற்கு / நிறுவனங்களுக்கு லொத்தர்களிலிருந்து கிடைக்கின்ற பங்களிப்பை குறைவடைவதன் மூலம் உரிய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் சிக்கலானது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஒ) 20.06.02.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு - மூலதனச் சொத்துக்களை விற்பனை செய்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------------------பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த வருமானக் கணக்கு தொடர்பாக ரூபா 190 மில்லியன் மொத்த வருமானம் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 42.24 மில்லியன் அதாவது 22 சதவீதமானது தவறை திருத்துவதற்கான வரவு வைத்தலாக இருந்தது.

(ii) 1995 ஆகஸ்ட் 03 ஆந் திகதி தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச்சிற்கு சுங்க வரியின்றி இறக்குமதி செய்து ஒப்படைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டி 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி விற்றுத் தீர்க்கப்பட்டிருந்தது. வாகனத்தை ஒப்படைக்கும் போது பதிவு செய்தல் சான்றிதழில் உள்ள குறைபாட்டின் காரணமாக இவ் வாகனத்தை ஒப்படைத்தல் நிராகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட வரியை அறவீடு செய்வதற்காக சுங்கத்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு செலுத்திய ரூபா 3.73 மில்லியன் பணம் மிளச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க மூலதனச் சொத்துக்களை விற்பனை செய்யும் போது அது தொடர்பாக பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் தவறுடனானவை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பொதுத் திறைசேரி மேற்பார்வை ஒப்படைத்துள்ள திணைக்களமாக அந்த வருமானங்களைச் சேகரிப்பது தொடர்பாக தொடர்ந்தும் ஈடுபடுதல் முக்கியமானது என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களை விற்றுத்தீர்ப்பதற்காக 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அத் திகதி வரை செயற்பட முடியாத நிலையில் 7723 மோட்டார் வாகனங்கள் காணப்பட்டன. அவ்வாகனங்களை விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு அப்பணத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க துறைக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களுக்குமான தரவு அடிப்டையைக் (Data base) தயாரித்து பேணுவதனைப் போல அரசாங்க சொத்துக்கள் முகாமைத்துவத்திற்கான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதற்காக கொம்ட்ரோலர் ஜெனரால் அலுவலகம் வரிசை அமைச்சின் கீழ் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அந்த அலுவலகத்தின் மூலம் அல்லது சொத்துக்களை விற்பனை செய்தல் மற்றும் அது தொடர்பாக வருமானங்களைச் சேகரிக்கும் முறையான நடைமுறை 2019 யூலை 03 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஓ) 20.06.04.00 ஆம் இலக்க வருமானக்குறியீடு – கடனை மிள அறவீடு செய்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------------------

(i) மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 181,367.52 மில்லியன் தொகையான மொத்த உப கடன் மீதியில் உள்ளடக்கப்பட்ட ஒவ்வொரு கடன் மீதி தொடர்பாக தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சில கோவைகளைப் பரீட்சித்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- திணைக்களத்தினால் இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் வழங்கப்பட்ட

முறையே ரூபா 550.99 மில்லியன் மற்றும் ரூபா 222.35 மில்லியன் ஆக ரூபா 773.34 மில்லியன் கூட்டு மொத்தமான முழுக் கடனையும் அறவீடு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டு இறுதி வரையும் முடியாதிருந்தது. அதில் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பது சம்பந்தமாக உரிய செலுத்த வேண்டிய பணத்தை அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கின்ற மாதாந்த குத்தகை பணத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கூட்டுத்தாபனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது அது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சனச சங்கத்திற்கு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்குவதற்காக 1992 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 11.11 மில்லியனிலிருந்து எதுவித பணமும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு 03 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 116 மில்லியன் கடன் பணத்தை 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. இதன் போது 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கடன் பணத்தில் எப் பணமும் அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன் எஞ்சிய கடன் பணத்திலும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் அறவீடு செய்தல் இடம் பெற்றிருக்கவில்லை.

- 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதி திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது நிலுவைக் கடன் பணத்தில் ஒரு பகுதியைச் செலுத்தி இக் கடன் பணத்தை செயற்படும் வகுதிக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு தெரிவிக்கப்பட்டதாகவும் நிலுவைப் பணத்தை தீர்த்து வைப்பதற்கு எடுக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் செயல் முன்னேற்றம் தொடர்பாக நிரந்தர பின்தொடர் நடவடிக்கை எடுக்குமாறு நிலுவை வருமான அறிக்கையில் காட்டப்பட்டிருந்தும் அது தொடர்பாக எதுவித செயல்முன்னேற்றமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் வட்டியுடனான கடன் பணத்தில் எப் பணமும் 2017 திசெம்பர் 31 அந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் போது நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை விற்று உரிய கடன் பணத்தை செலுத்துமாறு அல்லது அரசாங்கத்திற்கு குத்தகை கிடைக்கும் வகையில் ஆதனங்கள் மற்றும் சொத்துக்களை நீண்டகால குத்தகைக்கு வழங்குதல் அல்லது வழங்குமாறு அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததாக வருமான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டில் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 9.40 மில்லியன் வட்டியுடனான பணத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரையும் ரூபா 8.68 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. இது சம்பந்தமாக நிறுவனத்தை மீளமைப்புச் செய்து அக்கடன் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தும் கணக்காய்விற்குச்

சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சர்வோதய பொருளாதார தொழில் முயற்சிகள் அபிவிருத்திச் சேவை (உத்தரவாத) லிமிடட்டிற்கு கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கான புதுப்பிக்கத்தக்க சக்தி செயற்திட்டத்திற்காக (RERED) வழங்கப்பட்டிருந்த ரூபா 1,333.99 மில்லியன் கடன் பணத்தில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ரூபா 563.02 மில்லியன் தொகையை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

- ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ADB 1204 (SRI) SF இலக்க உடன்படிக்கையின் பிரகாரம் 1993 மார்ச் 10 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 276.75 மில்லியன் கடன் பணத்தை மாநகர சபை மற்றும் நகர சபை செயற்திட்டத்திற்கு உப கடனாக வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் கடன் பணத்தில் 2017 திசெம்பர் 31 வரையும் ரூபா 275.58 மில்லியன் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. இந் நிலுவைக் கடனை அறவீடு செய்வது சம்பந்தமாக திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந் நிலுவைக் கடனைப் பதிவழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை இந்நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.
- தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,861.60 மில்லியன் பணம் அறவிட வேண்டிக் காணப்பட்டது.

- 2013012 SL ஆம் இலக்க கடனின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் பணத்தில் மில்கோ நிறுவனத்தின் தொழிற்சாலையைத் திருத்தம் செய்வதற்காக (I ஆம் பகுதி) கட்டம் I மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட உப கடன்களில் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 2,549.58 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது.

- நிலுவை உப கடன்கள் காணப்படுகின்ற நிறுவனங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கடந்த ஆண்டில் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்யும் செயல் முன்னேற்றம் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

  (i) 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த உப கடன் பணம் (ON _ Lending) மற்றும் 2302 (உப கடன்) ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கு மத்தியில் ரூபா 6,108.56 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

  (ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 உப கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக திறைசேரி ஏடுகளுக்கும் மீதிகளை உறுதிப்படுத்தல்களுக்குமிடையே ரூபா 422.71 மில்லியன் சாதகமற்ற மற்றும் 04 உப கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக ரூபா 237.77 மில்லியன் சாதகமான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

  (iii) கோல்டன் கீ வைப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சிற்கு

2302 செலவு விடயங்களின் கீழ் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 4,989.90 மில்லியன் மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 2,500 மில்லியனை உள்ளடக்கி ரூபா 7,489 மொத்த தொகையான உப கடன் பணங்கள் உப கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இக் கொடுக்கல் வாங்கல்களுக்காக உப கடன் உடன்படிக்கை மேற்கொள்வதற்குரிய தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க உரிய உப கடன் உடன்படிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் இதனை உப கடனாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக திணைக்களத்தால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**(ஔ) 30.01.01.00 ஆம் இலக்க வருமான குறியீடு – வெளிநாட்டு மானியங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையால் திருத்திய நிதிப்பிரமாணத்தின் XI ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் இலங்கைக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு உதவிகள் சம்பந்தமான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் செய்யப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 124, 127 மற்றும் 128 களின் பிரகாரம் தமது நிறுவனத்திற்கு கிடைக்கின்ற / பெற்றுக்கொள்கின்ற அனைத்து வெளிநாட்டு உதவி மானியங்கள், நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் அறிக்கையிடுதல், கணக்கீடு செய்தல், மற்றும் சரியாக பயன்படுத்தும் பொறுப்பு அமைச்சு / திணைக்களங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மேற்கூறிய நிலைமை தொடர்பாக அனைத்து தரப்பினர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதாகவும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பொதுத் திறைசேரி மேற்பார்வை ஒப்படைக்கப்பட்டிருந்த திணைக்களமாக அத் திணைக்களம் வருமானங்களைச் சேகரிப்பது தொடர்பாக தொடர்ந்தும் ஈடுபடுதல் முக்கியமானது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) தொடர்புபட்ட கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது வெளி அமைச்சு / திணைக்களத்திற்கு இவ்வாறான உதவி கிடைத்திருந்ததா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் நடைமுறையை அறிமுகப்படுத்தாமையின் காரணமாக இவ் வருமான குறியீட்டிற்குரிய அனைத்து நன்கொடை இக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 8.96 மில்லியன் 03 பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் உரிய குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்படாது ஆண்டின் இறுதி வரை அவ்வாறே காணப்பட்டது.

(iv) நன்கொடையாகக் கிடைத்த ரூபா 1.25 மில்லியன் உரிய குறிகோள்களுக்காக ஈடுபடுத்தப்படாது ஆண்டின் போது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(v) ஒவ்வொரு செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு நிறுவனம் மற்றும் அரசாங்கங்களினால் வழங்கப்படுன்ற வெளிநாட்டு நன்கொடைகள் அச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 11 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 14.87 மில்லியன் தொகையானது செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துகின்ற அமைச்ச திணைக்களங்களின் வேண்டுகோளின் பிரகாரம் மீளாய்வாண்டில் அந்த நன்கொடையாளர்களுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

## 2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 24901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவு** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியான வை** | **இழிவு எல்லை** | **உள்ளபடியா னவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியா னவவை** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 8.00 | 7.95 | 4.20 | 4.44 | 24.50 | 19.98 |

## 2.8 பொதுவைப்புக் கணக்கு

பொதுவைப்புக் கணக்கில் 1900 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 35.12 மில்லியன் வரவு மீதியை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.9.1 அங்கீகரித்த பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவுகள் என்பன.

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 67 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனி நபருக்கான செலவு ரூபா 621,33 ஆக இருந்தது.

| **ஊழியர் வகை** | **அங்கீகரித்த பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட மட்டம் | 24 | 18 | 6 |
| (ii) மூன்றாம் மட்டம் | 01 | 01 | - |
| (iii) இரண்டாம் மட்டம் | 82 | 69 | 13 |
| (iv) ஆரம்ப மட்டம் | 20 | 20 | - |
| மொத்தம் | 127 | 108 | 19 |

(அ) மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்காக 2013 பெப்ரவரி 19 ஆந் திகதியிலிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மேல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அப்போதைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரால் ஒரு உத்தியோகத்தர் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்தவ அமைச்சின் கணக்காளர்கள் சேவைப் பிரிவினால் 2017 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அப் பதிற்கடமை நியமன கால எல்லை நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்தெம்பர் மாதத்தின் போது 2018 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாத்திரம் முழு நேர பதிற்கடமையாக அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கீகரித்திருந்தது.

(ஆ) 2017 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரை சிரேஷ்ட மட்டத்திலுள்ள 06 பதவிகளை உள்ளடக்கி மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 19 ஆக இருந்ததுடன் இவ்வாறு வெற்றிடங்கள் காணப்படுதல் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்துமாக இருந்தால் அவற்றை நிரப்புதல் அல்லது அவ்வாறு இல்லாதிருக்குமானால் அங்கீகரித்த பதவியணியினை திருத்தம் செய்யும் தேவைப்பாடு வலியுறுத்தப்படுகின்றது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொண்ட பதவியணியினர் மீளாய்வின் பிரகாரம் 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை அங்கீகரித்த பதவியணியினர் 123 ஆக இருந்தது எனவும் அதற்கிணங்க தற்பொழுது வெற்றிடங்கள் 08 மாத்திரம் காணப்படுவதாகவும் திணைக்களத்தால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.